**DEPOSITION OF WITNESS**
**(In the Court of the Subordinate Judge, Sankarankovil )**
**OS.No. 85 /2014**
********

**Deposition of Witness for : PW2**

**Name : செல்லையா**

**Father`s Name :**

**Village :**

**Taluk :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Date : 04.02.2026**

**Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.**

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வெங்கடசாமி நாயக்கன் மகன் செல்வராஜ் என்பவரை தெரியும்., குருசாமி நாயக்கர் மகள் ஜெலட்சுமி என்பவரை தெரியாது. எனக்கு புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்தது சம்மந்தமாக சாட்சியம்அளிக்க அழைப்பானை வந்தது. வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2011 ம்ஆண்டில் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். செல்வராஜ் என்னிடம் இடம் கேட்டார் . நான் செல்வராஜ் என்பவரின் வீட்டிற்கு சென்றேன். அப்போது அங்கு செல்வராஜ் மற்றும் 2 பெண்கள் இருந்தார்கள் அவர்கள் யார் என்று தெரியாது. நான் வா.சா.ஆ.1 புரோநோட்டில் கையொப்பம் செய்யும் போது வேறு யாருடைய கையெழுத்தோ, கைரேகையோ புரோநோட்டில் இல்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட அனுமதிக்கப்படுகிறார்.**

1 ம் பிரதிவாதி ஜெயலட்சுமி வாதி செல்வராஜ் என்பவரிடம் 30.07.2011 ம் தேதியன்று

ரூ. 7,00,000/- கடன் பெற்றுக் கொண்டு அன்றைய தினம் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 புரோநோட்டில் 1ம் பிரதிவாதியின் கைரேகை வைத்ததை பார்த்து விட்டு நான் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட்டு எழுதிக் கொடுத்த விவரமும், 1ம் பிரதிவாதி ஜெயலட்சுமி பணம் பெற்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Sd/- P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.